THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

MCOP.No.41/2022

Deposition of PW2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 29.09.2023.

Evidence Recorded Time: 01.41 P.M to 01.50 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | தங்கவேல் | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | சின்னவேடி | **Calling** | : | நிர்வாக அலுவலர், மேற்பார்வை பொறியாளர் அலுவலகம், மேட்டூர், |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை:-**

நான் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், மேட்டூர் மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க மேற்பார்வை பொறியாளர் அளித்த அனுமதிக் கடிதத்தின் பேரில் அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களுடன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். மேற்படி எனக்கு அளித்த அனுமதிக் கடிதம் சா.சா.ஆ.1 ஆகும். மனுதாரரின் சம்பள பட்டியல் ஏப்ரல் 2023 முதல் ஜூன் 2023 வரையிலான காலகட்டத்திற்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சம்பள பட்டியல்கள் சா.சா.ஆ.2 வரிசை ஆகும். 2021 டிசம்பர் முதல் 2023 ஜூன் வரை வருகை பதிவேட்டை தாக்கல் செய்துள்ளேன், மேற்படி வருகை பதிவேடு சா.சா.ஆ.3 ஆகும். மனுதாரர் எத்தனை நாட்கள் விடுப்பில் இருந்தார் என்றால் கடந்த 10.12.2021 முதல் 25.03.2022 வரை ஈட்டா மருத்துவ விடுப்பும், 26.03.2022 முதல் 22.04.2022 வரை ஈட்டிய விடுப்பும் அரசு அனுமதியாக 23.04.2022, 24.04.2022 ஆகியவை உட்பட மொத்தமாக 136 நாட்கள் விடுப்பில் இருந்தார். 02.05.2022 முதல் 17.05.2022 வரை மனுதாரர் 16 நாட்கள் ஈட்டிய விடுப்பில் இருந்தார். மேற்படி விபத்து காலத்தில் திரு.பி.சிவசக்திவேல், கணக்கு அலுவலர் வருவாய்/மத்திய அலுவலகம் மேட்டூர் அவர்கள் கூடுதல் பொறுப்பு வகித்தார்.

மேற்படி கூடுதல் பொறுப்பை மனுதார் விடுப்பில் இருந்த போது மேற்படி அலுவலர் திரு.பி.சிவசக்திவேல், கூடுதல் பொறுப்பு வகித்து வந்தார். வருகை பதிவேட்டில் மனுதாரருக்கு பதிலாக திரு.பி.சிவசக்திவேல் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

**<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

மனுதாரர் விபத்து சமயத்தில் என்ன பணியில் இருந்தார் என்றால் துணைநிதி கட்டுப்பாட்டு அலுலராக பணியில் இருந்தார். விபத்தின் போது மனுதாரர் பெற்று வந்த சம்பள பட்டியலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. டிசம்பர் 2021, ஜனவரி 2022, பிப்ரவரி 2022 முதல் மே 2022 வரையிலனா சம்பள பட்டியல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போதும் மனுதாரர் அதே பதவியில் தான் பதவி வகித்து வருகிறார் என்றாலும், அவர் எந்தவிதமான பதவி உயர்வும், பதவி இறக்கமும் செய்யப்படவில்லை என்றாலும் சரிதான். விபத்தி காலத்திற்கு பின்னிட்டு மனுதாரர் சம்பள உயர்வு பெற்றுள்ளார் என்றால் சரிதான். விபத்தில் ஏற்பட்ட காயங்களால் மனுதாரருக்கு பதவி இழப்போ, வருமான இழப்போ இல்லை என்றால் சரிதான். நான் இன்று தாக்கல் செய்துள்ள சம்பள பட்டியலில் மாதம் ரூ.25,000/- வருமான வரி பிடித்தம் செய்யப்படுகிறது என்றால் சரிதான். ஏப்ரல் 2023-ல் மொத்தமாக ரூ.76,000/- பிடித்தம் செய்யப்பட்டு நிகர சம்பளமாக ரூ.79,274/- பெற்று வருகிறார் என்றால் சரிதான். மனுதாரர் வருமான வரி செலுத்தி வருவதற்கான படிவம் எண்.16 ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. மனுதார் தொழில் வரி செலுத்தி வருவதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மனுதாரருக்கு உதவி செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் விபத்து காலத்திற்கான சம்பள பட்டியலை தாக்கல் செய்யாமல் தற்போதைய காலத்திற்குண்டான சம்பள பட்டியலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை -</u>** இல்லை.

ஒம்/-PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.